ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2413/30 - 2024 දෙසැම්බර් මස 04 වැනි බදාදා - 2024.12.04
*2413/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் எல்பிட்டிய பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

எல்பிட்டிய பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகுதல் காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) எனும் பிரிவின் கீழ், எல்பிட்டிய பிரதேச சபையின் இல. 15, அம்பன கஹதுாவ வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கொழும்ப தந்திரிகே நிஷாந்த பெரேரா என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம் ) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக , உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான எல்பிட்டிய பிரதேச சபையின் இல.15, அம்பன கஹதுாவ வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக நாகராஜா சாரா வினோதனி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

எல்பிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான, வேவெல்வல ஹேவகே ரவீந்ர விஜய குமார ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் (262 ஆம் அத்தியாயமான) தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, நாகராஜா சாரா வினோதனி என்பவர் எல்பிட்டிய பிரதேச சபையின் இல.15, அம்பன கஹதுாவ வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

**டபிள்யூ. எச். ஆர். விஜய குமார**,
தெரிவத்தாட்சி அலுவலர்,
எல்பிட்டிய பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
*2024*, நவெம்பர் *28*.

EOG *12 - 0040*